(2) கடந்த 50 ஆண்டுகளாக சென்னை கடற்கரைச் சாலையில் வெல்லக் பூங்காவில் செயல்பட்டு வந்த பாரதச் சாரணர் அமைப்பு வேறு இடத்திற்கு மாற்றப்படும் என்று வெளியாகிய செய்தி குறித்து.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"கடந்த 50 ஆண்டுகளாக சென்னை கடற்கரைச் சாலையில் வெல்லக் பூங்காவில் செயல்பட்டு வந்த பாரதச் சாரணர் அமைப்பு வேறு இடத்திற்கு மாற்றப்படும் என்று வெளியாகிய செய்தி குறித்து சாரண-சாரணியர் இயக்கத்தில் உள்ளவர்களிடையே ஏற்பட்டுள்ள அதிருப்தி குறித்து"

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்தக் கட்டிடத்திலேயே தொடர்ந்து இந்த சாரண-சாரணியர் இயக்க அலுவலகம் நீடிப்பதற்கான முயற்சிகளைக் கல்வித் துறை செய்ய மேற்கொண்டிருக்கின்றது என்று குறிப்பிட்டுள்ளது குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். பொதுப் பணித் துறைக்கு மாற்றுக் கருத்துக்களை கல்வித் துறை கூறியிருக்கிறது. அந்த மாற்றுக் கருத்துக்களைப் பொறுத்து பொதுப் பணித் துறை பரிசீலனை செய்து என்ன முடிவு செய்திருக்கிறது ? கல்வித் துறையினுடைய கருத்தை ஏற்றுக்கொண்டு செயல்படுத்துமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : என்னிடம் தரப்பட்டிருக்கின்ற விவரம் அவ்வளவுதான். இந்த வெல்லக் பூங்காதான் இந்த சாரண-சாரணியர் இயக்கத்திற்குத் தொடர்ந்து இருக்க வேண்டும் என்ற கருத்தைத்தான் கல்வித் துறை வற்புறுத்திக் கொண்டிருக்கிறது. பெரிய மகாநாடு, கூட்டம் இங்கே நடைபெற வேண்டுமென்பதற்காக, வேறு பணிகள் நடத்த அந்த இடம் தகுந்தது என்று கருதப்படுகிறது. ஆனால் இந்தச் சாரண-சாரணியர் இயக்ககம் அங்கேதான் இருக்க வேண்டும் என்று கல்வித் துறை வற்புறுத்துகிறது. காரணம் பல ஆண்டு காலமாக சாரணர் இயக்ககம் அங்கே இருந்து கொண்டிருக்கிறது. அதனால் அந்தப் பகுதியில் உள்ள கட்டிடம், அந்தப் பகுதியில் உள்ள குழந்தைகளுக்கும் நல்ல இடமாக இருப்பதாகக் கருதப்படுகிறது. அந்தக் காரணங்களுக்காக இந்த இடத்திலிருந்து சாரண-சாரணியர் இயக்க அலுவலகத்தை வெளியேற்றுகின்ற நடவடிக்கையை கல்வித்

@ 83 ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

துறை ஆதரிக்கவில்லை. அது அந்த இடத்திலேயே இருக்க வேண்டுமென்பதிலே எல்லாவிதமான முயற்சிகளையும் கல்வித் துறை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் பொறுப்பு ஏற்றுக்கொண்ட பிறகு, இந்தச் சாரண-சாரணியர் இயக்கத்திலே ஒரு நல்ல விழிப்புணர்ச்சி ஏற்பட்டு பள்ளிக் கூடங்களில் காரியங்கள் நல்ல முறையில் நடந்துகொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட நேரத்தில் சிக்கல்களை நீக்க கல்வித் துறை நடவடிக்கை எடுத்திருப்பதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இருந்தாலும்கூட, இந்தக் கட்டிடத்தையும் பொதுப் பணித் துறையிலிருந்து கல்வித் துறை வாங்கி, தனக்கே சொந்தமாக்குகின்ற வகையில் முயற்சிகள் எடுக்க வேண்டும். அப்படி எடுத்தால்தான், நிரந்தரமான தீர்வு பிறக்கும். அப்போதுதான் இந்தப் பணி முழுமையாக ஆகும். ஆகவே இந்தக் கட்டிடத்தை கல்வித் துறை தனக்கே சொந்தமாக்கிக்கொள்கின்ற வகையிலே முயற்சிகளை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படிப்பட்ட முயற்சியை அரசு எடுக்கும்.

5. தனி உறுப்பினர் தீர்மானங்கள்.

(1) அனைத்துப் பள்ளிகளையும் கல்லூரிகளையும் அரசே ஏற்று நடத்துவது குறித்து—தொடர்ச்சி.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் 7—11—1979, 31—7—1980, 12—2—1981 அன்று முன்மொழிந்த தீர்மானத்தின் மீது தொடர்ந்து விவாதம்.

* திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் கொண்டுவரப்பட்டிருக்கக்கூடிய இந்தத் தீர்மானத்தின் மீது நான் கழிந்த தனி நபர் தீர்மான நாளில் சொன்ன கருத்துக்களையொட்டி எனது எஞ்சிய கருத்தினைச் சொல்லி முடிக்க விழைகிறேன். அன்று இதைப் பற்றி நான் பேசுகின்றபோது, நம் நாட்டில் கல்வி எதிர்காலத்தில் சிறப்பாக அமைகின்ற அளவிலே சீரான வளர்ச்சி கல்வித் துறையிலே ஏற்படுகின்ற